www.tamilarangam.net

1990

# ஓராண்டு நினைவஞ்சலி

## தமிழீழ மக்கள் விடுதலைக் கழக (P. L. O. T. E) முன்னைநாள் செயலதிபரும் 17-7-89 அன்று அமரருமான தோழர் க. உமாமகேஸ்வரன் (முகுந்தன்) அவர்களின் ஓராண்டு நினைவாக...!

எமது விடுதலைப் போராட்டத்தின் வரலாற்றில் எமது சமூக மக்களின் சமூக அடிப்படையிலான அனைத்து வர்க்கத்தைச் சார்ந்தவர்களும் விடுதலை உணர்வு பெற்று மிக ஆழமாக வேரூன்றச் செய்வதற்கு ஓர் ஆக்கப்பூர்வமான பணியிலே தொடர்ச்சியாக இரண்டு தசாப்தங்களுக்கும் மேலாக தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம் என்கிற அரசியல், இராணுவ அமைப்பின் செயலதிபராய் இருந்த அமரர் க. உமாமகேஸ்வரன் (முகுந்தன்) அவர்களும் தமது அளப்பரிய பணியினை செய்தார்கள் என்பதனை சர்வ உலகில் வாழும் தமிழ் பேசும் மக்கள் நன்கு அறிவார்கள். அமரர் க. உமாமகேஸ்வரன் (முகுந்தன்) அவர்களுடைய இழப்பு என்பது அவர் சம்பந்தப்பட்ட அமைப்பின் அங்கத்தவர்களுக்கு மட்டுமல்லாது, இவ் விடுதலைப் போராட்டத்தை முன்னெடுத்து நடத்தும் சகோதர அமைப்புகளுக்கும், விடுதலை உணர்வை நேர்மையுடன் நேசித்த அனைத்து மக்களுக்கும் மிகப் பெரிய இழப்பாகும்.

போராட்டம் என்பது இழப்புக்களையும், உயிர் இழப்புக்களையும், நெருக்கடிகளையும் சந்திக்கும் ஒரு கரடு முரடான பாதையாகும். இப்பாதையிலே எமது இழப்புக்களை அல்லது நெருக்கடிகளைக் காரணமாகக் கொண்டு போராட்டத்தினை ஆரோக்கியபூர்வமாக முன்னெடுக்கும் பொறுப்புமிக்க சக்திகள் விரக்தியடைந்து போகுமானால் தமிழ் பேசும் எமது அடுத்த சந்ததியினருக்கு நாம் பெரும் துரோகத்தை இழைத்தவர்கள் என்ற முத்திரையை பதித்தவர்களாவோம்.

என்றென்றும் எம் நெஞ்சங்களில் உயிர் வாழ்ந்து கொண்டிருக்கும் காவிய நாயகன் அமரர் க. உமாமகேஸ்வரன் (முகுந்தன்) அவர்கள் இவ்வுலகை விட்டுப் பிரிந்து இன்றுடன் (17-7-90) ஒரு வருடமாகிறது. இந் நினைவுநாள் ஓர் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த நாள் இந்நாளில் தமிழ் ஈழ விடுதலை இயக்கம் அவர்களுக்கு உணர்வுகளால் அஞ்சலி செலுத்தும் இவ்வேளையில் ஐக்கியத்தினால் ஒன்றுபட்ட நாம், மக்களுக்கு முழுமையான விடுதலையை வென்றெடுக்கும் நோக்குடன் எம் மக்களுக்கு இப்பணிவான அறைகூவலை விடுகின்றோம்.

**"நாம் விதைத்தவை விஷ விதைகளுமல்ல,**
**எய்தவை நச்சுப் பாணங்களுமல்ல"**

இன்று ஆதிக்க வெறியர்களினதும் இன வெறியர்களினதும் கோரத்தாண்டவம் எமது மண்ணிலே இரத்த ஆற்றை பெருக்கெடுத்து ஓட வைக்கிறது. எமது மக்களுக்கும் மண்ணுக்கும் ஆன விடிவையும் சுதந்திரத்தையும் முழுமையாக வென்றெடுக்கும் வரையில் எமது போராட்டம் தொடரும் என்பதனை உறுதி கூறிக் கொண்டு, ஐக்கியமும், சகோரத்துவமும் சகவாழ்வும் எமது மண்ணிலே வளர்வதற்கு இக்காவிய நாயகனின் நினைவு நாளினை எமது விடுதலைப் போராட்டத்தின் மீண்டும் ஓர் உறுதி நாளாகப் பிரகடனப் படுத்திக் கொள்வோம்.

**தமிழ் ஈழ விடுதலை இயக்கம், அரசியல் பிரிவு,**
**T. E. L. O.**

கரிகாலன் அச்சகம், பெரியகடை வீதி, திருச்சி-8.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்